**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 284/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி. சுந்தரி** |
| Father's Name/Husband Name: | **திரு. ராமசாமி** |
| Village : | வெங்கலம் |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி கருணாநிதி ஆஜர் இல்லை அவருக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெங்கலம் கிராமத்தில் வசித்து வீட்டு வேலை செய்து வருகிறேன். எதிரி கருணாநிதி என்னுடைய மருமகன் ஆவார். இந்த வழக்கு சம்பவம் குறித்து நான் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன் மேல்நடவடிக்கை நான் வலியுறுத்தவில்லை. சம்பவம் நடந்த நாள், மாதம், வருடம் எனக்கு ஞாபகமில்லை. மருத்துவமனையிலிருந்த போது போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சி தனபாக்கியம் பிழைப்பு நிமித்தமாக வெளியூரில் வேலை செய்து வருவதால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை. சாட்சி தனபாக்கியம் என்னுடைய மகள் ஆவார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையின் போது கடந்த 11.05.2019ம் தேதி அன்று மாலை 5.00 மணியளவில் நானும் என் மகளும் வீட்டிலிருந்த போது எதிரி வீட்டிற்கு வந்து குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு என் மகளை திட்டினார் என்றும் அப்போது நான் தடுத்த போது எதிரி இரும்பு ஊதாங்குழலை எடுத்து என்னை தலை, கை, கால்களில் அடித்தார் என்றும் பின்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்த போது போலிசாரிடம் வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.